ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 2029/23 - 2017 ජූලි මස 25 වැනි අඟහරුවාදා - 2017.07.25

*2029/23 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் செய்யப்படும் கட்டளை**

*1979 ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டம்*

(முத்திரை)

மைத்திரிபால சிறிசேன

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி, மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், 1979 ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் 02 ஆம் பிரிவின் மூலம் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இதன் கீழ் அட்டவணையில் தெளிவாக காட்டப்பட்டுள்ள சேவைகளை வழங்கலில் ஈடுபடும் எந்தவொரு அரச கூட்டுத்தாபனம் அல்லது அரச திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது கூட்டுறவு சங்கங்கள் அல்லது அவற்றின் கிளைகளால் வழங்கப்படும் சேவைகளின் அத்தியாவசிய தன்மையை கவனத்தில் எடுத்தும், அந்த சேவைகள் மக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானது எனவும், அந்த சேவைகளை இடையூறு அல்லது தடை ஏற்படுத்தக்கூடியது என்பதனால் எந்தவொரு அரச கூட்டுத்தாபனம் அல்லது அரச திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது கூட்டுறவு சங்கங்கள் அல்லது அவற்றின் கிளைகளால் வழங்கப்படும் கீழே அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள சேவைகளை மேற்குறிப்பிட்ட பிரிவின் கருமங்களுக்காக அத்தியாவசிய சேவைகளென இந்த ஆணையின் மூலம் பிரகடனம் செய்கின்றேன்.

இரண்டாயிரத்துப்பதினேழாம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதியன்று கொழும்பில் கையெழுத்திடப்பட்டது.

அதியுத்தமராம் சனாதிபதியின் ஆணைப்படி

ஒஸ்ரின் பெர்ணான்டோ,<br>சனாதிபதி செயலாளர்.

**அட்டவணை**

1. பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் திரவ வாயு உள்ளிட்ட அனைத்து எரிபொருள் வழங்கல் அல்லது பகிர்ந்தளித்தல்.
2. சுங்க கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக துறைமுகம் என பொருள்கோடல் செய்யப்பட்டுள்ள எந்தவொரு துறைமுகத்திலுள்ள கப்பலிலிருந்து எண்ணை அல்லது எரிபொருளை வெளியேற்றுதல், கொண்டு செல்லல், தரையிறக்குதல், களஞ்சியப்படுத்துதல், ஒப்படைத்தல் அல்லது அகற்றுதல் தொடர்பான நிறைவேற்றப்பட வேண்டிய அல்லது அத்தியாவசியமான அனைத்து சேவைகள், வேலைகள் அல்லது எந்த வகையிலுமான உழைப்பை ஈடுபடுத்துதல்.

1A - G 25081 — 457 (2017/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.